[2021] 2 எஸ்.சி.ஆர் 520

கிரிதன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ப்ரைவேட் லிமிடெட்

(தற்போது கிரிஷ் ஸ்டீல் அன்ட் டிரேடிங் பிரைவேட் லிமிடெட் என்று அழைக்கப்படுகிறது)

எதிராக

வெங்கடேசன் சங்கரநாராயண் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண் 3299/2020)

மார்ச் 01, 2021

மாண்புமிகு முனைவர் நீதியரசர் தனஞ்செய ஒய். சந்தரசூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர். ஷா

நொடிப்பு நிலை மற்றும் நொடித்தோர் சட்டம், 2016 – 2016 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் நிறுவன நொடிப்பு நிலை தீர்வு செயல்முறைக்கு (சி.ஐ.ஆர்.பி.) உட்பட்ட ஒரு நிறுவனத்திற்காக மேல்முறையீட்டாளர் ஒரு தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார் – அத்தீர்வுத் திட்டம் கடன் வழங்குவோர் குழுமத்தாலும் (சி.ஓ.சி), தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தாலும் (என்.சி.எல்.டி.) ஏற்றுக்கொள்ளப்பட்டது – அதன்படி, மேல்முறையீட்டாளர், நிறுவன-கடனாளியின் மூன்றாந் தரப்புக் கணக்கில் (எஸ்க்ரோ கணக்கு) ரூ.5 கோடி தொகையை வைப்பு செய்தார் – இருப்பினும், ஏராளமான வாய்ப்புகள் வழங்கப்பட்ட போதிலும், தீர்வுத் திட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளர் மேலதிக கடமைகளை நிறைவேற்றவில்லை – இதன் விளைவாக, 11.11.2019 அன்று, கடன் வழங்குவோர் குழுமம் நிறுவன-கடனாளியை கலைப்பதற்கு வாக்களித்தது – அதை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் அனுமதித்தது – மேல்முறையீட்டில், தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத்

தீர்ப்பாயம் (என்.சி.எல்.ஏ.டி) மேல்முறையீட்டாளரை ரூ.15 கோடி தொகையை மூன்றாந் தரப்புக் கணக்கில் வைப்பு செய்ய அனுமதித்தது, மேலும் ரூ.50 கோடி தொகையைச் செலுத்தத் தவறினால், இந்த ரூ.15 கோடி தொகையும் பறிமுதல் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு மேல்முறையீட்டாளர் ஒப்புக்கொண்டார் – 08.09.2020 அன்று, மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது மற்றும் தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் கலைப்பு உத்தரவை உறுதி செய்தது – உச்சநீதிமன்றத்தின் முன் 09.10.2020 அன்று, மேல்முறையீட்டாளர், 10.01.2021 அன்று அல்லது அதற்கு முன்னர் ரூ.50 கோடி தொகையைச் செலுத்துவதாகக் கூறினார் – அவ்வாறு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செலுத்தத் தவறினால், முன்னதாகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையான ரூ.20 கோடியும் பறிமுதல் செய்யப்படும் என்று மேல்முறையீட்டாளருக்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது – அதன்பிறகு, தொகையைச் செலுத்துவதற்கான கால அவகாசம் 25.02.2021 வரை நீட்டிக்கப்பட்டது – இருப்பினும், கால அவகாசம் நீட்டிக்கப்பட்ட பின்னரும் பல மாதங்கள் கடந்துவிட்டன, மேலும் எந்தத் தொகையும் செலுத்தப்படவில்லை –மேல்முறையீட்டாளர், நிதி பெறுவதற்காகத் தவணைக் கடன் வழங்குநர்களை (term lenders) அணுகியதாகச் சமர்ப்பித்தார் – இருப்பினும், மேல்முறையீட்டாளருக்கு நிதி கிடைப்பதற்கு முன், நிறுவனத்தின் நிலையை கலைப்பில் உள்ள நிறுவனத்திலிருந்து செயல்பாட்டில் உள்ள நிறுவனமாக மாற்ற வேண்டும் என்று தவணைக் கடன் வழங்குநர்கள் வலியுறுத்தினர் –தீர்முடிவு: மேல்முறையீட்டாளரால் நிதியைத் திரட்ட முடியவில்லை – கலைப்பில் உள்ள

நிறுவனத்தின் நிலையைச் செயல்பாட்டில் உள்ள நிலைக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தும் தவணைக் கடன் வழங்குநர்களிடமிருந்து மேல்முறையீட்டாளரால் நிதியைத் திரட்ட முடியாது என்ற உண்மைதான் நிலைமையிலிருந்து வெளிவருகிறது – கலைப்பு உத்தரவு ரத்து செய்யப்படவில்லை – மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சுருக்கமாக என்னவென்றால், அது நிறுவனத்தின் சொத்துக்களை அடைமானம் வைத்து நிதியைத் திரட்டும், மேலும் நிறுவனம் கலைப்பிலிருந்து வெளியே வராதவரை, அதனால் நிதியைத் திரட்ட முடியாது – இது ஏற்கத்தக்கதல்ல – கலைப்பு உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது, மேலும் ஒரு இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை – மேல்முறையீட்டாளருக்குப் போதுமான வாய்ப்புகள் வழங்கப்பட்டன, மேலும் அவரால் ரூ.50 கோடியைச் செலுத்த முடியவில்லை – மேல்முறையீட்டாளர் நிறுவனம் அதன் கடமைகளை ஆற்றத் தவறிவிட்டது – அதன்படி உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் திட்டமிடப்பட்டதன் விளைவாக ரூ. 20 கோடி பறிமுதல் செய்யப்படுகிறது – அதன் விளைவாக, சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பதற்காக கலைப்பு அதிகாரியை நாட நிர்வாகத்திற்கு உத்தரவிடப்படுகிறது.

உரிமையியல் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து, நீதிமன்றம் தீர்ப்பளித்தது : 1. மேல்முறையீட்டாளரால் நிதியைத் திரட்ட முடியவில்லை. மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்ததன் மூலம் வெளிவரும் உண்மை என்னவென்றால், நிறுவனத்தின் நிலையை கலைப்பில் உள்ள ஒரு

நிறுவனத்திலிருந்து செயல்பாட்டில் உள்ள நிலைக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தும் தவணைக் கடன் வழங்குநர்களிடமிருந்து அதனால் நிதியைத் திரட்ட முடியாது. கலைப்பு உத்தரவு ரத்து செய்யப்படவில்லை. இறுதியாக, மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சுருக்கமாக என்னவாகிறது என்றால், நிறுவனத்தின் சொத்துக்களை அடைமானம் வைத்து அது நிதியைத் திரட்டும்; மேலும் நிறுவனம் கலைப்பிலிருந்து வெளியே கொண்டு வரப்படாவிட்டால், அதனால் நிதியைத் திரட்ட முடியாது. இது ஏற்கத்தக்கதல்ல. இந்தக் கட்டத்தில், கலைப்பு உத்தரவு நிறுத்தி மட்டுமே வைக்கப்பட்டுள்ளது, ஆனால் இந்த நீதிமன்றத்தால் ஒரு இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஆகிய இரண்டிலும் வழக்குகள் நிலுவையில் இருந்தபோது, மேல்முறையீட்டாளருக்குப் போதுமான வாய்ப்புகள் முன்னரே வழங்கப்பட்டன. போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டபோதிலும், தீர்வுத் திட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்க மேல்முறையீட்டாளரால் முடியவில்லை என்பதை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஆகியவற்றின் உத்தரவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. அக்டோபர் 9, 2020 முதல், ஏறக்குறைய ஐந்து மாதங்கள் கடந்துவிட்டபோதிலும், மேல்முறையீட்டாளரால் ரூ.50 கோடி தொகையைச் செலுத்த முடியவில்லை. நொடிப்பு நிலை மற்றும் நொடித்தோர் சட்டத்தின் கீழான திட்டத்தில் காலம் ஒரு முக்கியமான அம்சமாகும். இத்தகைய நடவடிக்கைகளை ஒரு காலவரையற்ற தாமதத்தில் நீடிக்க அனுமதிப்பது, சட்டத்தின்

நோக்கத்தைத் தெளிவாகத் தோற்கடிக்கும். ஒரு நிறுவனத்தின் நொடிப்புநிலையைத் தீர்ப்பதற்கான ஒரு நன்னம்பிக்கை முயற்சியானது, ஒரு விரும்பத்தக்க வழிமுறையாகும். இருப்பினும், ஒரு தீர்வு விண்ணப்பதாரர், நியாயமாக நடந்துகொள்ள வேண்டிய அவசியமாக உள்ளது. மேல்முறையீட்டாளர் அதன் கடமைகளை ஆற்றத் தவறிவிட்டது. இந்தக் கண்ணோட்டத்தில், உரிமையியல் மேல்முறையீட்டை மேலும் விசாரிக்க எந்தக் காரணமோ அல்லது நியாயமோ இருப்பதாக நாங்கள் காணவில்லை. அதன்படி, இந்த நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் உருவாக்கப்பட்ட விளைவான ரூ.20 கோடி தொகையை இழப்பது நேரிடும். இந்த உத்தரவின் விளைவாக, நிர்வாகம், சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பதற்காக கலைப்பதிகாரியை அணுக வேண்டும். [பத்தி 11]

இன்னோவென்டிவ் இன்டஸ்டிரிஸ் லிமிடெட் எதிராக ஜசிஜசிஜ வங்கி **(2018) 1 எஸ்சிசி 407 : (2017) 8 எஸ்சிஆர் 33 - மேற்கோள் காட்டப்பட்டது.**

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவு</u>

(2017) 8 எஸ்.சி.ஆர். 33 ல் பத்தி 11 மேற்கோள் காட்டப்பட்டது

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண் 3299/2020.

நிறுவன மேல்முறையீடு (ஏ.டி.) (நொடிப்பு) எண் 202/2020 ல், 08.09.2020 அன்று, புது டெல்லியில் உள்ள தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து.

மேல்முறையீட்டாளருக்காக, முதுநிலை வழக்குரைஞர் திரு. கே.வி. விஸ்வநாதன் மற்றும் வழக்குரைஞர் திரு. கௌரவ் வர்மா ஆகியோர் முன்னிலையாகினர்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக, முதுநிலை வழக்குரைஞர் செல்வி மீனாக்ஷி அரோரா, வழக்குரைஞர்கள் செல்வி மிஷா, செல்வி சாரு பன்சல், செல்வி பிரப் சிம்ரன் கௌர், எஸ்.எஸ். ஷ்ரா஫், ஆஷிஷ் மகிஜா, செல்வி ஷாகுன் மட்டா, அபிஜித் சென்குப்தா, திப்யத்யூத்தி பேனர்ஜி, ஸ்ரீதீப் சாட்டர்ஜி, ஆனந்த் தே, செல்வி சுமேதா பேனர்ஜி ஆகியோர் முன்னிலையாகினர்.

<u>தீர்ப்புரை</u>

முனைவர் நீதியரசர் தனஞ்செய ஒய் சந்திரசூட்,

1) இந்த மேல்முறையீடானது, தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின்[1] 8 செப்டம்பர் 2020 தேதியிட்ட உத்தரவிலிருந்து எழுந்துள்ளது.

1 "என்.சி.எல்.ஏ.டி "

2) மேல்முறையீட்டாளர், டெக்ப்ரோ சிஸ்டம்ஸ் லிமிடெட்[2] என்ற நிறுவனத்திற்காக ஒரு தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்தது. அந்த நிறுவனம் நொடிப்பு நிலை மற்றும் நொடித்தோர் சட்டம், 2016[3]-இன் கீழ் நிறுவன நொடிப்பு நிலை தீர்வு செயல்முறைக்கு உட்பட்டிருந்தது. இந்தத் தீர்வுத் திட்டம் கடன் வழங்குவோர் குழுமத்தால்[4] 89.92% பெரும்பான்மையுடன் 08 மார்ச் 2019 அன்று ஏற்கப்பட்டது. இந்தத் தீர்வுத் திட்டம் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தால்[5] மே 15, 2019 அன்று ஏற்கப்பட்டது. அதன்படி, மேல்முறையீட்டாளர் நிறுவன-கடனாளியின் மூன்றாந் தரப்பு கணக்கில் ரூ. 5 கோடி தொகையைச் செலுத்தினார். இருப்பினும், ஆறு மாத காலப்பகுதியில் ஏராளமான வாய்ப்புகள் வழங்கப்பட்டபோதிலும், பங்கு நிதி உட்செலுத்துகை உட்பட, தீர்வுத் திட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளர் தனது மேலதிக கடமைகளை நிறைவேற்றவில்லை. தீர்வுத் திட்டத்தைச் செயல்படுத்த மேல்முறையீட்டாளர் தவறியதன் விளைவாக, நவம்பர் 11, 2019 அன்று, கடன் வழங்குவோர் குழுமம் 99.28% பெரும்பான்மையுடன் நிறுவன-கடனாளியை கலைப்பதற்கு வாக்களித்தது. ஜனவரி 16, 2020 அன்று, தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் நிறுவன-கடனாளியின் கலைப்பைத் தொடர அனுமதித்தது. தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் உத்தரவை தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் உறுதி செய்தது. மற்றவற்றுடன், மேல்முறையீட்டாளர்

2 "நிறுவனக் கடனாளி"
3 "ஐ.பி.சி."
4 "சி.ஓ.சி"
5 "என்.சி.எல்.டி"

எட்டு மாதங்களுக்கும் மேலாகத் தீர்வுத் திட்டத்தைச் செயல்படுத்தத் தவறிவிட்டதால், 2016 ஆம் ஆண்டு தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாய விதிகளின்படி அதன் உள்ளார்ந்த அதிகாரத்தின் கீழ் அதன் அதிகார வரம்பைச் செலுத்த அது மறுத்துவிட்டதாக தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் குறிப்பிட்டது.

3) இந்த மேல்முறையீடு 09 அக்டோபர் 2020 அன்று இந்த நீதிமன்றத்தின் முன் வந்தபோது, ரூ. 50 கோடி தொகையை 10 ஜனவரி 2021 அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துவதாக மேல்முறையீட்டாளர் சார்பில் ஒரு அறிக்கை அளிக்கப்பட்டது. நொடிப்பு நிலை மற்றும் நொடித்தோர் சட்டத்தின் கீழ் கலைத்தல் என்பது கடைசி வழிமுறையாகும். இதைக் கருத்தில் கொண்டும், மேல்முறையீட்டாளரின் மூத்த வழக்குரைஞரால் அளிக்கப்பட்ட உறுதியான அறிக்கையின் காரணமாகவும், மேல்முறையீட்டாளருக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி, பின்வரும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது:

"1. ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. மேல்முறையீட்டிற்கு ஆதரவாக மூத்த வழக்குரைஞர் முனைவர் அபிஷேக் மனு சிங்வி அவர்களின் வாதத்தை நாங்கள் கேட்டோம். எடெல்வைஸ் அசட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் (இ.ஏ.ஆர்.சி) என்ற நிதி-வழங்குநர் சார்பில் மூத்த வழக்குரைஞர் செல்வி மீனாக்ஷி அரோரா ஆஜராகிறார், அவர் தேசிய

நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் ஆஜராகியவர். இ.ஏ.ஆர்.சி, மேல்முறையீட்டாளருக்கு ஆதரவு அளித்துள்ளது. தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் உத்தரவை ஆதரித்து, மேல்முறையீட்டை எதிர்க்க, கலைப்பதிகாரி சார்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஆஷிஷ் மகிஜா ஆஜராகிறார்.

3. நிறுவனக் கடனாளிக்கு எதிராக, நிறுவன நொடிப்பு நிலை தீர்வு செயல்முறை ஆகஸ்ட் 7, 2017 அன்று தொடங்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த தீர்வுத் திட்டம் ஏப்ரல் 30, 2018 அன்று கடன் வழங்குவோர் குழுமத்தால் (சி.ஓ.சி) ஏற்கப்பட்டது. இந்தத் தீர்வுத் திட்டம் மே 15, 2019 அன்று தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தால் ஏற்கப்பட்டது. அதன் பிறகு, மேல்முறையீட்டாளர் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்ற அடிப்படையில் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் அணுகப்பட்டது. எனவே, நிறுவனக் கடனாளியை கலைக்கக் கோரி, நொடிப்பு நிலை மற்றும் நொடித்தோர் சட்டம், 2016-இன் பிரிவு 33-இன் கீழ் ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. இது ஜனவரி 16, 2020 தேதியிட்ட அதன் உத்தரவின் மூலம் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தால் அனுமதிக்கப்பட்டது.

4. மேல்முறையீட்டாளர், பிப்ரவரி 3, 2020 அன்று தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் மேல்முறையீடு செய்த பிறகு, தீர்வுத்

திட்டத்துடன் இணங்குவதற்கான காலக்கெடுவைக் குறிப்பிடும் ஒரு ஆணையுறுதியாவணத்தைத் தாக்கல் செய்ய அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. பிப்ரவரி 25, 2020 அன்று, முன்னாள் கடன் வழங்குவோர் குழுமத்தின் உறுப்பினர், மேல்முறையீட்டாளர் மற்றும் கலைப்பதிகாரி ஆகியோருக்கு இடையே ஒரு கூட்டம் நடந்தது. ஒரு திருத்தப்பட்ட கால அட்டவணை ஒப்புக்கொள்ளப்பட்டது, அதன்படி, மேல்முறையீட்டாளர் தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் உத்தரவு வந்த ஏழு நாட்களுக்குள் ரூ. 15 கோடியை முன்பணமாகச் செலுத்த வேண்டும், மேலும் அதன்பிறகு மூன்று மாதங்களுக்குள் ரூ. 50 கோடி மீதி முன்பணத்தைச் செலுத்தத் தவறினால், அந்த ரூ. 15 கோடி பறிமுதல் செய்யப்படுவதற்கு உட்பட்டது.

5. மேல்முறையீட்டாளர், மார்ச் 2, 2020 அன்று தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முன் ஒரு ஆணையுறுதியாவணத்தைத் தாக்கல் செய்து, மேற்கண்ட விதிமுறைகளின்படி எட்டப்பட்ட புரிந்துணர்வை அவர்களுக்குத் தெரிவித்தது. ஜூலை 29, 2020 அன்று, முன்னாள் கடன் வழங்குவோர் குழுமத்தின் கடன் வழங்குநர்களால் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு மூன்றாந் தரப்பு-கணக்கில் பத்து நாட்களுக்குள் ரூ. 15 கோடியைச் செலுத்த மேல்முறையீட்டாளருக்கு தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் அனுமதி அளித்தது. தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத்

தீர்ப்பாயத்தின் உத்தரவுக்கு இணங்க, மேல்முறையீட்டாளர் ரூ. 15 கோடியைச் செலுத்தியுள்ளார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. மேல்முறையீட்டாளர் ஆகஸ்ட் 18, 2020 அன்று ஆணையுறுதியாவணத்தின் மூலம் ஒரு உறுதிமொழியைத் தாக்கல் செய்தார், அதில், கலைப்பு உத்தரவு மாற்றப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ரூ. 50 கோடியை முன்பணமாகச் செலுத்த வேண்டிய தனது கடமையை ஏற்றுக்கொண்டார். மேல்முறையீட்டாளர் ரூ. 50 கோடியை வைப்பு செய்யத்தவறும் பட்சத்தில், அது மூன்றாந் தரப்பு-கணக்கில் செலுத்திய ரூ. 15 கோடி தொகை பறிமுதல் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு மேல்முறையீட்டாளர் ஒப்புக்கொண்டது. தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் செப்டம்பர் 8, 2020 தேதியிட்ட அதன் உத்தரவின் மூலம், மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து கலைப்பு உத்தரவை உறுதி செய்தது.

6. மேல்முறையீட்டாளர் சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் முனைவர் அபிஷேக் மனு சிங்வி அவர்கள், நிறுவனத்தை கலைப்பது என்பது கடைசி வழிமுறையாக இருக்க வேண்டும் என்றும், பிப்ரவரி 25, 2020 அன்று எட்டப்பட்ட புரிந்துணர்வுக்கு ஏற்ப, மேல்முறையீட்டாளர் ஒப்புக்கொண்ட விதிமுறைகளுக்குக் கட்டுப்படத் தயாராக இருப்பதாகவும் சமர்ப்பித்தார். மூன்று மாத காலத்திற்குள், மேல்முறையீட்டாளர் ரூ. 50 கோடி முன்பணத்தைக் கொண்டு வருவார் என்றும், அதில் தவறினால், தீர்வுத் திட்டம் ஏற்கப்பட்டதைத்

தொடர்ந்து செலுத்தப்பட்ட ரூ. 5 கோடி தொகையுடன், மூன்றாந் தரப்பில் ஏற்கனவே செலுத்தப்பட்ட ரூ. 15 கோடி தொகையும் பறிமுதல் செய்யப்படும் என்றும் அவர் சமர்ப்பித்தார்.

7. முன்னாள் கடன் வழங்குவோர் குழுமத்தின் உறுப்பினர்கள் தங்கள் வணிக முடிவின்படி, தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தங்கள் சிறந்த நலனுக்கு உகந்தது என்று கண்டறிந்துள்ளனர் என்ற அடிப்படையில், இ.ஏ.ஆர்.சி. சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் திருமதி மீனாக்ஷி அரோரா, மேல்முறையீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தை ஆதரிக்கிறார்.

8. கலைப்பதிகாரி சார்பில் ஆஜரான வழக்குரைஞர் திரு. ஆஷிஷ் மகிஜா, மேல்முறையீட்டை எதிர்த்தபோது, கொள்கையளவில் கோரிக்கையை கலைப்பதிகாரி எதிர்க்கவில்லை என்றாலும், மே 2019-ல் தீர்வுத் திட்டம் ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து, மேல்முறையீட்டாளர் தனது கடமைகளுக்கு இணங்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற உண்மையை ஒரு நீதிமன்ற அதிகாரியாக அவர் நீதிமன்றத்திற்குக் கொண்டுவர விரும்புவதாகச் சமர்ப்பித்தார்.

9. **நிறுவனக் கடனாளியை கலைப்பது என்பது கடைசி-வழிமுறையாக இருக்க வேண்டும். நொடிப்பு நிலை மற்றும் நொடித்தோர் சட்டம், நிறுவன நொடிப்பு**

நிலைகளைத் தீர்ப்பதில் ஒரு பரந்த பொது நலனை அங்கீகரிக்கிறது, மேலும் அதன் நோக்கம் நிலுவையில் உள்ள மற்றும் செலுத்த வேண்டிய பணத்தை மீட்பது மட்டுமல்ல. பிப்ரவரி 25, 2020 அன்று எட்டப்பட்ட புரிந்துணர்வின்படி, மூன்று மாத காலத்திற்குள் கூடுதலாக ரூ. 50 கோடி தொகையைச் செலுத்தத் தவறினால், தான் செலுத்திய ரூ. 20 கோடி தொகையை பறிமுதல் செய்வதற்கு நிபந்தனையின்றி உட்படுத்தப்படுவதற்கு ஒப்புக்கொண்டதன் மூலம், மேல்முறையீட்டாளர் குறைந்தபட்சம் இந்தத் தற்போதைய கட்டத்திலாவது மேலோட்டமாக தனது நன்னம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார். மேல்முறையீட்டாளர் அவ்வாறு செய்வதற்கு ஒரு இறுதி வாய்ப்பை வழங்குவதற்காக, பிப்ரவரி 25, 2020 அன்று எட்டப்பட்ட புரிந்துணர்வின் விதிமுறைகளின்படி, தனது நன்னம்பிக்கையை நிரூபிக்க, மேல்முறையீட்டாளர் ரூ. 50 கோடி தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும் என்று நாங்கள் உத்தரவிடுகிறோம். மேலும் மேல்முறையீட்டாளர் தான் தெரிவித்தவாறு பணத்தை முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ செலுத்தத் தவறினால், இதுவரைச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 20 கோடியும் மேல்முறையீட்டாளருக்கு எந்தவிதமான மேல்முறையீடும் இல்லாமல் பறிமுதல் செய்யப்படும் என்று அவருக்குத் திட்டவட்டமாக அறிவிக்கப்படுகிறது. அதன்படி, பின்வரும் இடைக்கால உத்தரவுகள் வழங்கப்படுகின்றன:

(i) தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் 08 செப்டம்பர் 2020 தேதியிட்ட எதிர்ப்புகுள்ளான உத்தரவு நிறுத்தி வைக்கப்படுகிறது;

(ii) மேல்முறையீட்டாளர், தீர்வுத் திட்டத்தைச் செயல்படுத்தும் தனது திறனை நிரூபிக்கவும், மற்றும் பிப்ரவரி 25, 2020 அன்று எட்டப்பட்ட புரிந்துணர்வுக்கு இணங்கவும், ரூ. 50 கோடி தொகையை 10 ஜனவரி 2021 அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டும்; மற்றும்

(iii) நிறுவனக் கடனாளியின் சொத்துக்களுக்கான ஏலம் இடைப்பட்ட காலத்தில் நிறுத்தி வைக்கப்படும்.

10. மேல்முறையீடு, ஜனவரி 12, 2021 அன்று பட்டியலிடப்படும். "

(வலியுறுத்தப்பட்டது)

4) பின்னர், 25 நவம்பர் 2020 அன்று, மேற்கண்ட உத்தரவு இந்த நீதிமன்றத்தால் தெளிவுபடுத்தப்பட்டு, தொகையைச் செலுத்துவதற்கான கால அவகாசம் 25 பிப்ரவரி 2021 வரை நீட்டிக்கப்பட்டது.

5) முதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் கடந்துவிட்டாலும், எந்தவிதமான தொகையும் செலுத்தப்படவில்லை. கால நீட்டிப்பு

வழங்கிய இரண்டாவது உத்தரவுக்குப் பின்னரும், மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. தடை உத்தரவுக்குப் பிறகு, மேல்முறையீட்டாளர் நிறுவனக் கடனாளியை பொறுப்பேற்றுக் கொண்டார். பொறுப்பு வழங்கப்பட்டாலும், மேல்முறையீட்டாளர் தனது பரஸ்பர கடமைகள நிறைவேற்றவில்லை. உரிமையியல் மேல்முறையீட்டில், வ.வி. எண் 22633/2021 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில், நிறுவன விவகாரங்கள் அமைச்சகம், நிறுவனங்களின் பதிவாளர் மற்றும் இந்திய நொடிப்புநிலை மற்றும் வணிக நொடிப்பு நிலை வாரியம்[6] ஆகியவற்றுக்கு, நிறுவனக் கடனாளியின் புதிதாக நியமிக்கப்பட்ட இயக்குநர்கள் மற்றும் கையொப்பமிட்டவர்களை பதிவேடுகளில் ஏற்றுக்கொள்ளுமாறும்; நிறுவனக் கடனாளியை செயல்பாட்டில் உள்ள நிறுவனமாக ஏற்றுக்கொண்டு, அதன் நிலையை "கலைப்பின் கீழ் உள்ள நிறுவனத்திலிருந்து" "செயல்பாட்டில் உள்ள நிறுவனம்" என்று மாற்றுமாறும்; மற்றும் இந்த நீதிமன்றத்தின் முந்தைய உத்தரவுகளுக்கு இணங்க பொதுவாக அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் உத்தரவிடக் கோரப்பட்டுள்ளது.

6) மேல்முறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. கே.வி. விஸ்வநாதன் அவர்கள், 09 அக்டோபர் 2020 மற்றும் 25 நவம்பர் 2020 ஆகிய முந்தைய உத்தரவுகளின்படி, மேல்முறையீட்டாளர் நிதி பெறுவதற்காகத் தவணைக் கடன் வழங்குநர்களை அணுகியதாகச் சமர்ப்பிக்கிறார். இருப்பினும், தவணைக் கடன் வழங்குநர்கள், மேல்முறையீட்டாளருக்கு நிதி கிடைப்பதற்கு முன், நிறுவனத்தின்

6 "ஐ.பி.பி.ஐ."

நிலையை கலைப்பின் கீழ் உள்ள நிறுவனத்திலிருந்து ஒரு செயல்பாட்டில் உள்ள நிறுவனமாக மாற்ற வேண்டும் என்று வலியுறுத்துவதாக மேல்முறையீட்டாளர் சமர்ப்பிக்கிறார். இந்திய நொடிப்புநிலை மற்றும் வணிக நொடிப்பு நிலை வாரியத்தால் 15 ஜனவரி 2021 அன்று அனுப்பப்பட்ட மின்னஞ்சலின் நகல், மேற்கண்ட வழக்கிடை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. திரு. விஸ்வநாதன் அவர்கள், பிப்ரவரி 25, 2020 அன்று கடன் வழங்குவோர் குழுமத்துடன் எட்டப்பட்ட புரிந்துணர்வின்படி, மேல்முறையீட்டாளர் ரூ. 50 கோடி தொகையைச் செலுத்த வேண்டும் என்பதை இந்த நீதிமன்றத்தின் முந்தைய உத்தரவுகள் அங்கீகரிக்கின்றன என்று சமர்ப்பிக்கிறார். எனவே, நிறுவனக் கடனாளியின் சொத்துக்களை அடைமானம் வைத்து மேல்முறையீட்டாளர் நிதியைத் திரட்டுவார் என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நிறுவனத்தின் நிலை மாற்றப்பட்டாலொழிய, தவணைக் கடன் வழங்குநர்கள் நிதியை வழங்கத் தயாராக இல்லை மற்றும் விருப்பம் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

7) எடெல்வைஸ் அசட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்[7] சார்பில் ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் செல்வி மீனாக்ஷி அரோரா அவர்கள், நிறுவனக் கடனாளியின் மீதான மிகப்பெரிய பங்கை இ.ஏ.ஆர்.சி கொண்டுள்ளதாகச் சமர்ப்பித்தார். முந்தைய உத்தரவுகளில் பதிவு செய்யப்பட்டதைப் போல, தீர்வுத் திட்டத்திற்கு இணங்க மேல்முறையீட்டாளரின் முயற்சிகளை இ.ஏ.ஆர்.சி ஆதரித்தது

7 "இ.ஏ.ஆர்.சி"

என்றும், அதன்படி, தேவையான நிதியைத் திரட்ட மேல்முறையீட்டாளருக்கு வசதியாக இந்த நீதிமன்றம் பொருத்தமான உத்தரவுகளை பிறப்பிக்கலாம் என்றும் செல்வி அரோரா சமர்ப்பித்தார்.

8) மறுபுறம், கலைப்பதிகாரி சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஆஷிஷ் மகிஜா அவர்கள், நிறுவனத்தின் நிர்வாகம் மேல்முறையீட்டாளரிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், மேல்முறையீட்டாளர், இசைவுத் தீர்ப்புமுறை விவகாரங்கள் உட்பட பல்வேறு தகராறுகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், மேலும் பல வாய்ப்புகள் வழங்கப்பட்ட போதிலும், இந்த நீதிமன்றத்தின் முன் கூறப்பட்டதைப் போல, மேல்முறையீட்டாளரால் நிதியைத் திரட்ட முடியவில்லை என்றும் சமர்ப்பித்தார். எனவே, மேல்முறையீட்டாளரின் தவறுகை குறித்து இந்த நீதிமன்றம் பொருத்தமான முடிவை எடுக்கலாம் என்று திரு. மகிஜா சமர்ப்பிக்கிறார்.

9) திரு. மகிஜாவின் இந்தச் சமர்ப்பிப்பை திரு. விஸ்வநாதன் மறுத்தார், மேலும் இசைவுத் தீர்ப்புமுறை கோரிக்கைகள் தீர்க்கப்பட்டதை அவர் மறுக்கிறார்.

10) மூத்த வழக்குரைஞரால் அளிக்கப்பட்ட அறிக்கையின் பேரில் பிறப்பிக்கப்பட்ட 09 அக்டோபர் 2020 தேதியிட்ட நீதிமன்றத்தின் உத்தரவின் மூலம், 10 ஜனவரி 2021 தேதிக்கு முன்பாக ரூ. 50 கோடி தொகையைச் செலுத்த

வேண்டியிருந்தது. 25 நவம்பர் 2020 அன்று, தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்ட முந்தைய உத்தரவைத் தெளிவுபடுத்தும் போது, ரூ. 50 கோடியைச் செலுத்துவதற்கான கால அவகாசம் 25 பிப்ரவரி 2021 வரை நீட்டிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் உத்தரவின் விதிமுறைகளுக்கு இணங்கத் தவறினால், ஏற்கனவே செலுத்தப்பட்ட ரூ. 20 கோடி தொகை பறிமுதல் செய்யப்படும் என்று மேல்முறையீட்டாளருக்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

11) மேல்முறையீட்டாளரால் நிதியைத் திரட்ட முடியவில்லை. வழக்குரைஞர் திரு. விஸ்வநாதனின் சமர்ப்பிப்புகளிலிருந்து வெளிவரும் உண்மை என்னவென்றால், நிறுவனத்தின் நிலையை கலைப்பில் உள்ள ஒரு நிறுவனத்திலிருந்து செயல்பாட்டில் உள்ள நிலைக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தும் தவணைக் கடன் வழங்குநர்களிடமிருந்து மேல்முறையீட்டாளரால் நிதியைத் திரட்ட முடியாது. கலைப்பு உத்தரவு ரத்து செய்யப்படவில்லை. இறுதியாக, மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சுருக்கமாக என்னவாகிறது என்றால், நிறுவனத்தின் சொத்துக்களை அடைமானம் வைத்து அது நிதியைத் திரட்டும்; மேலும் நிறுவனம் கலைப்பிலிருந்து வெளியே கொண்டு வரப்படாவிட்டால், அதனால் நிதியைத் திரட்ட முடியாது. இது ஏற்கத்தக்கதல்ல. இந்தக் கட்டத்தில், கலைப்பு உத்தரவு நிறுத்தி மட்டுமே வைக்கப்பட்டுள்ளது, ஆனால் இந்த நீதிமன்றத்தால் ஒரு இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம்

மற்றும் தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஆகிய இரண்டிலும் வழக்குகள் நிலுவையில் இருந்தபோது, மேல்முறையீட்டாளருக்குப் போதுமான வாய்ப்புகள் முன்னரே வழங்கப்பட்டன. போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டபோதிலும், தீர்வுத் திட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்க மேல்முறையீட்டாளரால் முடியவில்லை என்பதை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் மற்றும் தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஆகியவற்றின் உத்தரவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. அக்டோபர் 9, 2020 முதல், ஏறக்குறைய ஐந்து மாதங்கள் கடந்துவிட்டபோதிலும், மேல்முறையீட்டாளரால் ரூ.50 கோடி தொகையைச் செலுத்த முடியவில்லை. நொடிப்பு நிலை மற்றும் நொடித்தோர் சட்டத்தின் கீழான திட்டத்தில் காலம் ஒரு முக்கியமான அம்சமாகும். இத்தகைய நடவடிக்கைகளை ஒரு காலவரையற்ற தாமதத்தில் நீடிக்க அனுமதிப்பது, சட்டத்தின் நோக்கத்தைத் தெளிவாகத் தோற்கடிக்கும். ஒரு நிறுவனத்தின் நொடிப்புநிலையைத் தீர்ப்பதற்கான ஒரு நன்னம்பிக்கை முயற்சியானது, ஒரு விரும்பத்தக்க வழிமுறையாகும். இருப்பினும், ஒரு தீர்வு விண்ணப்பதாரர், நியாயமாக நடந்துகொள்ள வேண்டிய அவசியமாக உள்ளது. மேல்முறையீட்டாளர் அதன் கடமைகளை ஆற்றத் தவறிவிட்டது. இந்தக் கண்ணோட்டத்தில், உரிமையியல் மேல்முறையீட்டை மேலும் விசாரிக்க எந்தக் காரணமோ அல்லது நியாயமோ இருப்பதாக நாங்கள் காணவில்லை. அதன்படி, இந்த நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் உருவாக்கப்பட்ட விளைவான ரூ.20 கோடி தொகையை இழப்பது நேரிடும். இந்த உத்தரவின் விளைவாக, நிர்வாகம்,

சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பதற்காக கலைப்பதிகாரியை அணுக வேண்டும். இந்த உரிமையியல் மேல்முறையீடு அதன்படி தள்ளுபடி செய்யப்படுகிறது.[8]

12) தரப்பினர்களை இணைப்பதற்கான விண்ணப்பம் உள்ளிட்ட நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் அனைத்தும் முடித்து வைக்கப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

8 இன்னோவென்டிவ் இன்டஸ்டிரிஸ் லிட். எதிராக ஐசிஐசிஐ வங்கி (2018) 1 எஸ்சிசி 407, பத்திகள் 12-16

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."